DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No.125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW –9 ஆர்.இளங்கோ** |
| Father's Name | ராமசாமி |
| Village | செஞ்சி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 20.01.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் அரசு மருத்துவமனையில் மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். 2022ல் செஞ்சி அரசு மருத்துவமனையில் மாற்று பணியிலிருந்த போது அக்பர் வயது 26 த/பெ ஷெரீப் என்பவர் 18.01.2022 காலை 10 மணியளவில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவருடைய தாயார் ஜமீலாபீ நான் பணியிலிருந்த போது அழைத்துகொண்டு வந்தார். அவருடைய வாக்குமூலத்தின் படி 10 தெரிந்த நபர்கள் அவரை இரும்பு ராடால் காலை 6.00 மணியளவில் அவருடைய இல்லத்தின் அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தததில் அவருடைய சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதித்ததில் சுமார் 8x2x2 CM அளவுள்ள கிழிந்த காயம் பின்னந்தலையில் காணப்பட்டது. இதற்கு தகுந்த மருத்துவ உதவி அளித்து தையல்போடப்பட்டு மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதே தேதியில் அமீத் பாஷா வயது 26 த/பெ ஷெரீப் காலை 10.10 மணிக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவருடைய தாயார் ஜமீலாபீ நான் பணியிலிருந்த போது அழைத்துகொண்டு வந்தார். அவருடைய வாக்குமூலத்தின் படி 10 தெரிந்த நபர்கள் அவரை இரும்பு ராடால் காலை 6.00

மணியளவில் அவருடைய இல்லத்தின் அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தததில் அவருடைய சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதித்ததில் சுமார் 12x3x3 CM அளவுள்ள கிழிந்த காயம் இடது பக்க முன் மற்றும் பின்னந்தலையில் காணப்பட்டது. மற்றும் வலது கை மற்றும் முன்னங்கையில் வீக்கம் மற்றும் கடுமையான வலி இருந்தது. மற்றும் வலது முட்டி மற்றும் மேல்காலில் சுமார் 1x1x1 CM அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது. இதற்கு தகுந்த மருத்துவ உதவி அளித்து தையல்போடப்பட்டு மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி அக்பர் த/பெ ஷெரீப் என்பவருக்கு மேல்சிகிச்சையின் போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது அதில் எலும்பு முறிவு எதுவும் இல்லை எனவும், ரத்தகசிவு எதுவும் இல்லை எனவும் அறிக்கையில குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அக்பருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றளித்தேன். அமீத் பாஷா என்பவருக்கு மேல்சிகிச்சையின் போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது அதில் எலும்பு முறிவு எதுவும் இல்லை எனவும், ரத்தகசிவு எதுவும் இல்லை எனவும் அறிக்கையில குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்கு வலது கை, வலது காலுக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் அறிக்கையில் கை, காலிலும் எலும்பு முறிவு காணப்பட்டது. அதன் அடிப்படையில் காயம் 1 தலையில் எற்பட்டது சொற்ப காயம் என்றும், காயம் 2 கை, காலில் ஏற்பட்ட எலும்புமுறிவு கொடுங்காயம் எனவும் சான்றளித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். **மேற்படி இரண்டு நபர்களுக்கும் வழங்கிய காயச்சான்றுகள் அ.சா.ஆ-5 மற்றும் அ.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>குறுக்கு விசாரணை</u>

காயம் பட்ட அக்பர் மற்றும் அமீத் பாஷா ஆகியோர் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரத்திலிருந்து 4 மணிநேரம் காலதாமதமாகத்தான் சிகிச்சைக்கு சேர்ந்தனர் என்றால் சரிதான். இருவரும் சிகிச்சைக்கு சேர்ந்த போது சுயநினைவுடன் இருந்தார்கள். மேற்படி 4 காயங்களும் எதிரிகளை தாக்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் வேகமாக செல்லும்போது கூர்மையான பகுதியில் தவறிவிழுந்ததினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயம்பட்ட நபர்கள் அவர்கள் சொன்ன நேரத்திலிருந்து 1

மணிநேரம் முன்பாகவோ (அ) பின்பாகவோ காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. மேற்படி அக்பர் தலையில் 7 தையல்களும், அமீத் தலையில் 11 தையல்போட்டதாக சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்கள், மேற்படி தகவல் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அக்பர் என்பவருக்கு 4 தையல்போடப்பட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமீத்துக்கு தையல் போடப்பட்டாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை.

மேற்படி இரண்டு நபர்களுக்கும் முதல்உதவி சிகிச்சை மட்டும் நான் அளித்தேன். மேற்படி இரண்டு நபர்களுக்கும் மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் கருத்துரை வழங்கினேன். அமீத் என்பவர் 15 நாட்கள் மேல்சிகிச்சை எடுத்துகொண்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல 11 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் முன்னிலையில் வாக்குமூலம் பெறப்பட்டதா என்பது குறித்து ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

சிடி ஸ்கேன், எக்ஸ்ரே ஆகியவற்றை நீங்கள் பார்த்தீர்களா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தான் கருத்துரை வழங்கினேன். நான் எலும்பு முறிவு சிறப்பு சிகிச்சை மருத்துவர் இல்லை என்றால் சரிதான். விசாரணை அதிகாரி எனக்கு சம்மன் கொடுத்து அதன்பேரில் வரவழைத்து நான் சொல்ல சொல்ல வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். விசாரணை அதிகாரி ஆயுதங்களை காண்பித்து உங்களிடம் எந்த கருத்துரையும் கேட்கவில்லை என்றால் சரிதான்.